நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 187/2021
அரசு தரப்புக்காக அ. சா.5 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.ராதிகா, காவல் ஆய்வாளர் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 15 | | | |

1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 15th day of October 2025.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 02.08 )

நான் தற்போது விழுப்புரம் மாவட்டம் கொல்லியங்குணத்தில் உள்ள பணியிடை பயிற்சி மையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு பண்ருட்டி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கடந்த 06.06.2021 ஆம் தேதி பிற்பகல் 14.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது பண்ருட்டி வட்டம் எல்லார்பாளையம் நல்லான் தெருவைச் சேர்ந்த ஏழுமலை என்கிற ஜெயமணி மனைவி பாரதி வயது 19 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று பண்ருட்டி அனைத்து மகளிர் காவல்நிலைய குற்ற எண்.13/2021 சட்டப்பிரிவு 451, 328, 376(2)(h), 376 r/w 114 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலையும்

வாதியின் புகார் மனுவையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்கொண்டு இவ்வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே மாலை 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் குப்புசாமி, மணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (அந்த மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது). பின்னர் சாட்சிகள் குப்புசாமி, மணி விசாரணை செய்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்/அ.சா.1, ஜெயந்தி/அ.சா.2, சிவா என்கிற சுப்ரமணி ஆகியோரை விசாரணை செய்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடத்தை பார்வையிட்டதில் இருந்தும் சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததன் பேரில் எதிரியை தேடியபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் 1)ஜெயமணி என்கிற ஏழுமலை, 2)சுந்தர் என்கிற சுந்தரமூர்த்தி, 3)மணி என்கிற மணிகண்டன் ஆகியோர்கள் பண்ருட்டி நான்குமுனை சந்திப்பு அருகில் நின்றிருந்தவர்களை வாதியின் அப்பா சிவா என்கிற சுப்ரமணி என்பவர் அடையாளம் காட்டியதன் பேரில் அடையாளம் அறிந்து எதிரிகளை 06.06.2021 ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்தும் கைதின் போது உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றியும் எதிரிகளின் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தும் பின்னர் மேற்படி 1வது எதிரி ஜெயமணி என்கிற ஏழுமலை என்பவர் எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சுனில்குமார், ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் 16.45 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்தும் 2வது எதிரி சுந்தர் என்கிற சுந்தரமூர்த்தி என்பவர் மாலை 17.15 மணிக்கு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி அதே ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தும் 3–வது எதிரி மணி என்கிற மணிகண்டன் மாலை 17.45 மணிக்கு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி அதே ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தும் எதிரிகள்

மற்றும் பார்ட்டிகள் சகிதம் மாலை 18.00 மணிக்கு காவல்நிலையம் வந்து எதிரிகளுக்கு திரேக சோதனை செய்து எதிரிகளை பாரா வசம் ஒப்படைத்தேன். எதிரிகள் முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட சமயத்தில் பதிவு செய்யப்பட்ட நேரம் அனைத்து ஒப்புதல் வாக்குமூலங்களிலும் 16.45 என தட்டச்சு பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரிகளை பண்ருட்டி காவல்நிலைய முதல்நிலைக் காவலர் 1377 திரு.மாயவேல், முதல்நிலைக் காவலர் 500 திரு.கேசவபெருமாள் பண்ருட்டி அனைத்து மகளிர் காவல்நிலைய காவலர் 2333 திருமதி.நஸ்ரின்பானு ஆகியோர் மூலம் நீதிமன்ற மெய்காவலுக்கு அனுப்பி வைத்தேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணை பண்ருட்டி அனைத்து மகளிர் காவல்நிலைய தலைமை காவலர் 321 திருமதி.நிர்மலா என்பவர் மூலம் கடலூர், அரசு தலைமை மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பி வைத்தேன். அதன்பிறகு பணிமாறுதலாகி சென்றுவிட்டேன்.

<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகார் எந்த தேதியில் பெறப்பட்டது என்றால் 06.06.2021. புகாரில் தேதி எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. ஆனால் என்னிடம் கொடுத்தது 06.06.2021. ஒப்புதல் வாக்குமூலத்தில் மூன்று எதிரிகளும் பண்ருட்டி நாலுமுனை ரோடு சந்திப்பில் மூன்று எதிரிகளையும் ஒரே இடத்தில் பிடித்ததாக ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி தானாக கூறுகிறார் ஒப்புதல் வாக்குமூலம் ஒருவருக்கு பின் ஒருவராக பதிவு செய்யப்பட்டது. அ.சா.1 முதல் அ.சா.3 ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோர்கள். அ.சா.1 முதல் அ.சா.3 வரை உள்ள சாட்சிகளை தவிர்த்து வேறு சாட்சிகளை விசாரித்துள்ளேனா என்றால் நான் புலன் விசாரணை செய்த வரையில் நான் முதல் விசாரணையில் சொன்ன சாட்சிகளை தான் விசாரணை செய்துள்ளேன். சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன்.

அக்கம் பக்கத்து வீட்டில் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அவர்களை சாட்சிகளாக குறிப்பிடவில்லை. பார்வையிட்ட சம்பவ இடத்தில் என்னென்ன இருந்தது என்று பார்வை மகசரில் குறிப்பிட்டுள்ளேன்.

<u>2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

முதல் தகவல் அறிக்கை கலம் எண்.3a வில் சம்பவம் சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஜூலை மாதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தேதி எதுவும் குறிப்பிட்டு குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். கலம் எண்.8–ல் காலதாமத்திற்கு வாதியால் தாமதம் என்பதை தவிர குறிப்பிட்ட காரணம் எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது விசாரணையில் 1–ம் எதிரி அவரது வீட்டில் அவரது தாயாருடன் ஒரு போர்ஷனிலும் தங்கை மற்றும் அவரது கணவர் அதே வீட்டில் மற்றொரு போர்ஷனிலும் வசித்து வந்ததாக தெரிய வந்ததா என்றால் தெரியவந்தது. 1–ம் எதிரியின் தாயார், தங்கை மற்றும் தங்கையின் கணவர் ஆகியோரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் விசாரித்தேன். சாட்சியாக குறிப்பிடவில்லை. எதிரியின் உறவினர்கள் என்பதால் வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை. 1–ம் எதிரியின் தாயார் மற்றும் தங்கை, தங்கையின் கணவர் ஆகியோரை விசாரணை செய்தேன் என்றும் அந்த வாக்குமூலங்கள் இவ்வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் வழக்கில் வாக்குமூலத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீடு சித்ரா, க/பெ.ஜெகநாதன், சிமெண்ட் ஷீட் போட்ட வீடு என்று மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் SOC என்று குறிப்பிட்டு வீட்டின் உள்ளே உள்ள விவரங்களை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அருகாமையிலேயே வீடுகள் உள்ளதாக வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 செல்போன் பயன்படுத்தி வந்ததாக என்னுடைய விசாரணையில் தெரிய வந்ததா என்றால் தெரியவந்தது. அவர் பயன்படுத்திய செல்போனின் நம்பர் என்ன என்று நான் விசாரிக்கவில்லையா என்றால் புலன் விசாரணைக்கு

தேவைப்படவில்லை என்பதால் அதைபற்றி கேட்கவில்லை. பார்வை மகசரில் சாட்சியின் முதல் கையெழுத்து ஒயிட்னர் கொண்டு அழிக்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2020 டிசம்பர் மாதம் கொரோனா ஊரடங்கு அமலில் இருந்து சாலைகளில் பாரிகார்டு அமைக்கப்பட்டு இருந்தது என்றால் சரிதான். இவ்வழக்கில் காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களால் பெறப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் அவர் மேற்கொண்ட முதல் விசாரணை இவ்வழக்கில் மறைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1/பாதிக்கப்பட்ட பெண் முதல் எதிரியின் வீட்டில் பாகம் பிரித்து தங்கைக்கு கொடுக்கப்பட்ட பாகத்தையும் முழுமையாக தனது பெயரில் எழுத வேண்டும் என்று கேட்டு 1–ம் எதிரிக்கும் அ.சா.1–க்கும் ஏற்பட்ட பிரச்சனையால் 2, 3 எதிரிகள் 1–வது எதிரிக்கு ஆதரவாக நண்பர்கள் என்ற முறையில் பேசியதால் 2, 3 எதிரிகள் இவ்வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சொன்னால் சரியல்ல. 1, 2, 3 எதிரிகள் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் மே மாதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதுவும் தட்டச்சு பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்று எதிரிகளையும் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றும் ஒப்புதல் வாக்குமூலம் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும் வாக்குமூலங்கள் அனைத்தும் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

என்னுடைய விசாரணையின் போது அ.சா.1/பாதிக்கப்பட்ட பெண் *"சுந்தரமூர்த்தி தன்னுடன் உடலுறவு வைத்தபோது தன்னுடைய கணவர் உடன் இருந்தார்"* என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை.

என்னுடைய விசாரணையின் போது அ.சா.1/பாதிக்கப்பட்ட பெண் *"மறுநாள் காலையில் தான் மயக்கமானதாக"* சொல்லியுள்ளாரா என்றால் முதல் சம்பவம் நடந்த சமயத்தில் மயக்கமாக இருந்ததாக சொல்லியுள்ளார்.

என்னுடைய விசாரணையின் போது அ.சா.1/பாதிக்கப்பட்ட பெண்

*"என் மாமியார், நாத்தனாரிடம் நடந்த விவரத்தை சொன்னேன்"* **என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை.**

**என்னுடைய விசாரணையின் போது அ.சா.1/பாதிக்கப்பட்ட பெண்** *"2020-ல் மணிகண்டனுடன் இருக்க வேண்டும் என்றும் இல்லையென்றால் எனது கணவர் என்னையும் எனது குழந்தையும் கத்தியால் வெட்டி கொல்வேன்"* **என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. இல்லையென்றால் தற்கொலை செய்து கொள்வேன் என்று தான் சொல்லியுள்ளார். நான் விசாரித்த வரையில் இந்த வழக்கை சரிவர விசாரிக்கவில்லை என்றும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.**

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 03.02)

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாளன்று, 1969-ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/-G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.